குழுவுக்கு விடலாம். இதிலுள்ள முழு விவரங்களையும் அறிந்து, விசாரித்து, தாங்களே அதில் திருப்தி அடைந்தால், அந்தக் கருத்தைச் சபைக்குத் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, இதைப் பற்றிய பிரச்னை இங்கு எழுப்பப்பட்டிருக்கிற காரணத்தினால், இதைப் பற்றிய விவரங்களை அறிந்து, அதன் பிறகு என்ன **முடிவு எடுக்கலாம்** என்பதுபற்றி, கனம் அங்கத்தினர் கலியாண சுந்தரம் அவர்கள் சொல்லியபடி, தாங்கள் நாளைக்கு இதன் மீது தீர்ப்பு அளிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர் : நாளைக்கோ அல்லது இரண்டு நாட்கள் கழித்தோ எடுத்துக் கொள்ளலாம்.

III.—MOTIONS EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY :

(1) MOTION GIVEN NOTICE OF BY SRI V. R. NEDUNCHEZHIAN.

கனம் சபாநாயகர் : இப்பொழுது கனம் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள தீர்மானத்தை நான் வாசிக்கிறேன்.

"கீழ்க்கண்ட காரணங்களையும் வேறு சில காரணங்களையும் ஒட்டி கனம் எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை இந்தப் பேரவை தெரிவித்துக்கொள்கிறது :—

(1) இந்த அரசாங்கம், பொதுவாக எல்லாப் பண்டங்களின், குறிப்பாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாத பண்டங்களின், மிதமிஞ்சிய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது ;

(2) இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தில் உணவு நிலைமையைச் சீராக்கவும், விவசாயித்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் தவறிவிட்டது.

(3) இந்த அரசாங்கம் தொழில் நுட்பக் கல்வித் துறைகளுக்கு, குறிப்பாக மருத்துவக் கல்வித் துறைக்கு மாணவ மாணவியரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செம்மையான முறையில் செய்யத் தவறிவிட்டது ;

(4) இந்த அரசாங்கம் கோயம்புத்தூரில் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யவும், சென்ற சில திங்கள்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர் துயரத்தைத் துடைக்கவும் தவறிவிட்டது ;

(5) இந்த அரசாங்கம் சேலம் எஃகு (உருக்கு) தொழிற்சாலை நிறுவுவது பற்றி பலமுறை மீண்டும் மீண்டும் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கத் தவறிவிட்டது ;

(6) இந்த அரசாங்கம் நகராட்சிகளில் காங்கிரசல்லாத பிற கட்சிகளின் செல்வாக்கை ஒடுக்கும் வகையில், சில நகராட்சி மன்றங்களைக் கலைத்து, தனது அதிகாரத்தை முறை தவறிப் பயன் படுத்தியுள்ளது ;

(7) இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழக மக்கள் கொண் டிருக்கும் ஆழ்ந்த உணர்ச்சிகளை, 1965 சனவரி-பிப்ரவரி திங்கள் களில் பலரின் உயிரிழப்பு ஏற்படும் அளவுக்கு இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடந்தும், இந்த அரசாங்கம் உணரத் தவறிவிட்டது ; அதுமட்டுமல்லாமல் இந்தியத் தலைமை அமைச்சர் களும், தமிழக முதலமைச்சரும் பல தடவைகளில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமளும், அவற்றின் அடிப்படையில் சட்டத் திருத்தத்தை இந்திய அரசு கொண்டுவர ஏற்பாடு செய்யாமலும் தவறியதன் மூலம் தமிழக மக்களுக்கு இந்த அரசாங்கம் துரோகம் இழைத்து விட்டது ;

(8) இந்த அரசாங்கம் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாக ஆக்கவும், தமிழ் வழுப்புகளில் சேர மாணவர் களுக்குத் தனிச் சலுகைகளும், வசதிகளும் அளிக்கவும் 1956-ம் ஆண்டின் ஆட்சிமொழிச் சட்டத்தைச் செம்மையாகவும் விரை வாகவும் நடைமுறைக்குக் கொண்டுவரவும், தமிழை மாநிலத்தின் ஆட்சி மொழியாகப் பரவலான முறையில் நடை முறைப்படுத்தவும் தவறி விட்டது.

இரா. நெடுஞ்செழியன்,
எதிர்க்கட்சித் தலைவர்,
சட்டமன்றப் பேரவை."

(The Hon. Speaker then requested those Members who were in favour of leave being granted to rise in their places, and counted the number of Members who rose.)

MR. SPEAKER : Leave is granted. I will fix the time for discussion after the meeting of the Business Advisory Committee. We are having a meeting of that Committee after half an hour.

(2) MOTION GIVEN NOTICE OF BY SRI M. KALYANASUNDARAM.

MR. SPEAKER : Sri M. Kalyanasundaram has given notice of another no-confidence motion. According to Rule 72, a motion must not raise a question substantially identical with one on which the Assembly has given a decision in the same session. That means . . .

SRI SAW. GANESAN : There is no fundamental difference.

SRI M. KALYANASUNDARAM : Rule 72 refers to a question on which a decision has already been taken. In the case of the no-confidence motion given notice by the Leader of the Opposition, no decision has been taken; only leave has been granted. For my motion the present stage is only asking for leave. So Rule 72 cannot be invoked in this case. Rule 72 is for an entirely different purpose.

1st August 1966]

MR. SPEAKER: According to the hon. Member 'decision' referred to in Rule 72 means the final decision and not the decision now taken. Is that so?

SRI M. KALYANASUNDARAM: Rule 72 says: "A motion must not raise a question substantially identical with one on which the Assembly has given a decision in the same session." No decision has been taken in the present case.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The decision is that leave be granted. That is also a decision.

SRI M. KALYANASUNDARAM: Granting of leave is not a decision. Decision means decision by vote. That is my submission.

Rule 72 is not relevant to the question before the House now. Rule 72 is applicable only when a question has been decided and subsequently in the same session a similar question is raised. That rule cannot operate in this case.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:* கனம் சபாநாயகர் அவர்களே நம்பிக்கையில்லாத் தீர்மானம் அநேகமாக முதல் தீர்மானத்தில் காணப் பட்டிருக்கிற காரணங்களே ஓட்டியே ஸப்ஸ்டான்ஷியல் என்று இருக்கிறது—இருக்கக்கூடிய நேரத்தில் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் தனித்தனியாக அனுமதி கேட்டு, தனித் தனியாக எடுத்துக் கொண்டு, தனியாக விவாதித்து, தனித் தனியாக முடிவு எடுக்கலாம் என்ற முறையில் போனால் மூன்று நான்கு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களே விவாதிக்க வேண்டிய நிலைமை வரும். அநேகமாக ஒரேவிதக் காரணங்களையொட்டி ஒரே தீர்மானம் இருக்க வேண்டும் என்பதை, விதிகள் எப்படியிருந்தாலும், சம்பிரதாயமாகக் கூட வைத்துக்கொள்ளலாம். இப்போது ஒரு தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. இதில் இல்லாத வேறு காரணம் இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், இது வேறு தீர்மானம், அது வேறு தீர்மானம். இதற்கு வேறு ஓட்டு, அதற்கு வேறு ஓட்டு, இதற்கு விவாதத்திற்கு ஒரு நாள், அதற்கு விவாதத்திற்கு ஒரு நாள் என்றுகூடக் கேட்கலாம். இதைத் தான் தாங்கள் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சபையிலே இருக்கிற பழக்க வழக்கங்களுக்கு மாறாக கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய யோசனை இருக்கிறது. நான் என்னுடைய தீர்மானத்தைத் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. தீர்மானங்கள் பல அங்கத்தினர்கள் கொடுக்கலாம்; அவற்றுள் சில சில வேற்றுமைகள் இருக்கலாம். எல்லாத் தீர்மானங்களின் மீதான விவாதத்தையும் ஏக காலத்தில் எடுத்துக் கொள்ளுவது தான் இங்குள்ள பழக்கம். அந்த முறையில் எல்லாத் தீர்மானங்களையும் ஏக காலத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய தீர்மானத்தை ஓட்டுக்கு விடவேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. கனம்

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தீர்மானத்தின் மீதே ஓட்டு எடுக்கலாம். அதை நான் ஒத்துக்கொள்ளுகின்றேன். ஏற்கனவே இருக்கிற பழக்கப்படி எல்லாத் தீர்மானங்களையும் எடுத்துக் கொண்டு விவாதிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே தங்கள் மூலம் கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது, இப்போது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற காரணங்களுக்கும் அவர்கள் தீர்மானத்தில் கொடுத்திருக்கிற காரணங்களுக்கும் வேற்றுமை இருக்கிறது என்று சொன்னால், அதைத் தனித் தீர்மானமாகக் கொண்டு வரவேண்டியிருக்கும். இப்போது கனம் அங்கத்தினர் அவர்களே கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானத் திற்கு அனுமதி அளிக்கும் வகையில் எழுந்து நின்று ஓட்டுக் கொடுத்தார்கள். 'இந்தக் காரணங்கள், மேலும் சில காரணங்கள்' என்று கூறப்பட்டு அனுமதிக்கப்பட்டது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தீர்மானத்தில் "வேறு காரணங்கள்" என்றும் இருக்கிறது. அதன் கீழ் எதை வேண்டுமானாலும் கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லலாம். இதெல்லாம் ஒரு சம்பிரதாயத்தை அமைத்துக்கொள்ளுவது நல்லது. கனம் அங்கத்தினருடைய தீர்மானத்திற்கு அவசியம் இல்லை. அந்தத் தீர்மானம் வந்தால் கெடுதல் ஒன்றும் இல்லை: அதற்கு நான் ஆட்சேபிக்கவில்லை. நல்ல சம்பிரதாயத்தை அமைக்க வேண்டு மென்றுதான் சொல்லுகிறேன். ஒரு தீர்மானம் அனுமதிக்கப் பட்ட பிறகு இன்னொரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அனுமதிக்க வேண்டும் என்று சொல்லுவது சிரிய சம்பிரதாயத் திற்கு முரண்பாடு உள்ளதாக இருக்கும். ஆகையால் இது வேண்டியதில்லை என்று சொல்லுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM rose.

MR. SPEAKER: The motion given notice of by the hon. Member is more or less identical with the one admitted just now. Is there any rule permitting the clubbing of the two motions together, to have a common discussion and take a decision?

SRI M. KALYANASUNDARAM: Past practice alone is our guidance. Let the Hon. Speaker kindly refer to rule 55(2). The purpose of asking the hon. Members to rise in their places is for a different reason and not for ascertaining the decision. If not less than 21 hon. Members rise, the Hon. Speaker shall accordingly intimate that leave is granted and that the motion will be taken up on such and such a date. Now, leave has been granted but no decision has been taken. If the Hon. Speaker, for other reasons is not prepared to allow me to move my motion, it is a different matter.

***திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி ஒரே மாதிரியான தீர்மானத்தைப் பல பேர்கள் கொண்டு வந்து

1st August 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு அங்கத்தினரும் எழுந்திருந்து அதைப் பிரேரேபித்துக் கொண்டு வரவேண்டிய அவசியம் கிடையாது. 4, 5 பேர்கள் ஒரே மாதிரியான காரணங்களுக்காக கட் மோஷன் கொடுத்திருந்தால் ஒருவர் எழுந்திருந்து ஒரு தீர்மானத்தைப் பிரேரேபிப்பார்கள். அந்த கட் மோஷன் திரு. கலியாண சுந்தரம், திரு. நெடுஞ்செழியன், திரு. மதியழகன் இப்படி பலபேர்கள் பேரில் சேர்ந்து கொண்டுவரப்படும். ஒவ்வொரு அங்கத்தினரும் எழுந்திருந்து தீர்மானத்தைப் பிரேரேபிக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஒரே குறிக்கோள் தான். வேறு சில காரணங்களும் உண்டு என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரே தீர்மானத்தையே கனம் எதிர்க்கட்சித் தலைவர், திரு. கலியாணசுந்தரம், திரு. சா. கணேசன் இப்படி 51 பேர்களும் கொண்டுவந்து, ஒவ்வொருவரும் எழுந்திருந்து தீர்மானத்தைப் பிரேரேபித்துக் கொண்டிருந்தால், சட்டசபையின் முக்கியமான நேரம் வீணாக்கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member has not thrown any light over the rules (Laughter).

SRIMATHI T. N. ANANDANAYAKI: This happens in the case of cut motions. All the cut motions standing in the names of those hon. Members who have given notice of the same would be before the House and they would all be clubbed together but there will be only one main motion before the House. Some such procedure may be adopted.

MR SPEAKER: That cannot be. That is not applicable.

திரு. மீ. கலியாணசுந்தரம்: 1964-ம் ஆண்டில் இதே மாதிரி இந்தச் சபையிலே இரண்டு தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு, இரண்டு தீர்மானங்களின் மீதும் எதகாலத்தில் விவாதம் நடந்திருக்கிறது. நமக்கு முன்னால் பழைய அனுபவம் இருக்கிறது. அது வழிகாட்டியாக இருக்கும்.

MR. SPEAKER: I do not think that they are identical. They are different matters.

SRI M. KALYANASUNDARAM: The result is the same. Both the motion for disapproval and the censure motion come under Rule 55(1).

இரண்டு மோஷன்களாக இருந்தாலும், வார்த்தைகளில் வேற்றுமை இருக்கலாமே தவிர, அந்தத் தீர்மானங்களுடைய முடிவுகளின் பலன் ஒன்றுதான். அவைகளை வேறு வேறு தீர்மானம் என்று கூறுவதற்கு அவசியம் இல்லை. அது தான் என்னுடைய அபிப்பிராயம். பார்லிமெண்டில் எப்படி வழக்கம் என்றால், பாலட் போட்டு, அதில் வருகிற தீர்மானத்தை அனுமதிப்பது வழக்கம். எதிர்க்கட்சியினர் பல பிரிவினர்களாக இருக்கும்பொழுது, நல்ல மசூதலை விட்டுவிடக் கூடாது. நல்ல மசூது இருந்திருக்கிறது. அந்த மாபை விட்டுவிட வேண்டாம்.

[1st August 1966

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி பாராளுமன்றத்தில் 'பாலட்' எடுக்கிற வழக்கம் இருக்கிறது. 'பாலட்' இல்லாமலேயே முதலில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் எழுந்திருந்து அதற்கு ஆதரவு அளித்திருக்கிறார்கள். இதில் எனக்கு ஒன்றும் இல்லை. மூழ்கிப் போகிறவனுக்கு எவ்வளவு ஆழம் இருந்தால் என்ன? அதே போல் ஒரு தீர்மானம் இருந்தால் என்ன, பல தீர்மானங்கள் இருந்தால் என்ன, நான் ஆட்சேபிக்கவில்லை. இந்த மன்றத்தில் ஒரு நல்ல சம்பிரதாயம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

MR. SPEAKER: All right. I shall examine the matter and, I will take it up to-morrow morning.

IV.—POINT OF ORDER *RE.* PRECEDENCE FOR THE NO-CONFIDENCE MOTION.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு இந்தச் சபை அனுமதி வழங்கியிருக்கிறது. அதை எப்பொழுது விவாதத்திற்கு வைத்துக்கொள்ளலாம் என்பதைத் தாங்கள் குறிப்பிடுவதாக இருக்கிறீர்கள். அதற்கு மத்தியில் இந்த மன்றத்தின் சம்பிரதாயத்தையும், பாராளுமன்றத்தின் நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்கள் சிலவற்றையும் அனுசரித்து, தங்களுடைய மேலான கவனத்திற்குச் சில வார்த்தைகளைக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்பது. . . .

MR. SPEAKER: What is the point of order? Let the hon. Member state the point of order first and then advance his argument.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மன்றத்திற்கு 12 மணிக்குப் போகவேண்டியிருக்கிறது. அதற்குள் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும். 10 நாட்களுக்குள் என்றைக்கு வேண்டுமானாலும் இந்த விவாதத்தை வைத்துக்கொள்ளலாம். 10-வது நாளைக்குக்கூட வைத்துக் கொள்ளலாம். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசி என்றைக்கு இந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் எலெக்ட்ரிசிடி போர்டைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை, அதைப் பற்றி ஒன்றும் தவறு கூறப்படவில்லை. எலெக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட்டின் மீது விவாதத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று சொல்லப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் சொல்வதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Before the Chair fixes the time for taking up the motion how can any point of order be raised? After I fix the